# முன்னாள் சிறைச்சாலை அதிகாரி சுட்டுக்கொலை!

## காலியில் இன்று பயங்கரம்

காலி, மார்ச் 13

முன்னாள் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் இனந்தெரியாத நபர்கள் சிலரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று வியாழக் கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்படி முன்னாள் சிறைச்சாலை அதிகாரி காலி, அக்மீமன, தலகஹ பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 29 வியாழக்கிழமை 13.03.2025 கதிர் 152







# யாழில் 17 சபைகளையும் கைப்பற்றியே தீருவோம்

## தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப்பணம் செலுத்துவதற்காக தேர்தல்கள் அலுவலகத்துக்கு இன்று வருகை தந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சண்முகநாதன் ஸ்ரீபவனந்தராஜா மற்றும் தொகுதி அமைப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.



# இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு!

## கொலையாக இருக்கலாம் எனச் சந்தேகம்



கொழும்பு, மார்ச் 13

அம்பாந்தோட்டை, அங்குனுகொலபெலெஸ்ஸ, அபேசேகர பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை காலை இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அபேசேகர பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞரின் சடலத்துக்கு அருகில் வைத்து மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக யாழில் கவனயீர்ப்புப் போர்






யாழ்ப்பாணம், மார்ச் 13

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயற்பாட்டுத் தொடர்ச்சியில் பெண்களுக்கு எதிரான அனைத்துச் சுரண்டல்களையும் முடிவுக்குக் கொண்டுவர மௌனத்தைக் கலைப்போம் எனும் தொனிப்பொருளில் மக்கள் கவனயீர்ப்பு செயல்வாதம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டப் பேரணி தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது.

# பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமை: சந்தேகநபரின் சகோதரி உட்பட இருவர் கைது

கொழும்பு, மார்ச் 13

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் பெண் வைத்தியரைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய சந்தேகநபரின் சகோதரி மற்றும் மற்றொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

37 வயதுடைய பெண் மற்றும் 27 வயதுடைய ஆண் ஆகிய இரண்டு சந்தேகநபர்களும் நேற்றுமுன்தினம் 2➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கச்சதீவு திருவிழா நாளை ஆரம்பம்

## ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 13

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளைமறுதினம் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஆலயத்துக்குச் செல்லவுள்ள பக்தர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 4 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை அரச பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து குறிகட்டுவான் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

கச்சதீவுக்கான படகு சேவையானது குறிகட்டுவான் இறங்குதுறையில் இருந்து வெள்ளிக்கிழமை காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகட்டுவானில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகுக்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1300 ஆகும்.

கச்சதீவுக்கு குழுவாகஃ தனியாக வருகை தரும் மக்கள் அவர்களது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வயது, பால்நிலை மற்றும் அவர்கள் பயணிக்கும் படகு இலக்கம், படகின் வகை, படகோட்டியின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்களை இரண்டு பிரதிகளில் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வெளிமாவட்டங்களில்இருந்து தமது சொந்தப் படகுகளில் திருவிழாவுக்குச் செல்வோர் தமது வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற் பயணப் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்வதுடன் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு வெள்ளிக்கிழமை இரவு உணவு மற்றும் சனிக்கிழமை காலை உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாக உள்ளதால் மதுபானம் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று யா. மாவட்ட செயலர் அறிவித்துள்ளார்.



### பெண் வைத்தியர் பாலியல்......

செவ்வாய்க்கிழமை இரவு கல்னேவ நிதிகும்பயாய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தலைமறைவாக இருப்பதற்கு உதவிய காரணத்துக்காக மேற்படி பெண் கைது செய்யப்பட்டார் . அதேநேரத்தில் சந்தேகநபரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் பெண் வைத்தியரின் கைத்தொலைபேசி மற்ற நபரிடம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# தமிழரசைச் சிதைக்கச் சிலர் சதி!

## சி.வி.கே. சிவஞானம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 13

"இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் பல்வேறு சதிவலைகள் பின்னப்படுகின்றன. அதிலும் தமிழரசுக் கட்சியை எப்படியாவது சிதைத்து அதனை உடைத்துக் கட்சியைப் பிளவுபடுத்தி விட வேண்டும் என்ற நோக்குடன் சிலர் செயற்படுகின்றனர். அதையெல்லாம் தாண்டி நாம் முன்னேறுவோம்." - என்று கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது புதிய தமிழரசுக் கட்சி உருவாக்கம் குறித்து பேசப்படுகின்றது. உண்மையில் அப்படியாக கட்சிக்குள் இருப்பவர்கள் யாரும் கருதவில்லை.

அப்படியான எண்ணங்கள் கூட அவர்களிடத்தில் இல்லை. ஏனெனில் கட்சியில் பலருடனும் இது தொடர்பில் பேசியிருந்தபோது அவர்கள் அனைவரும் இதனை மறுதலித்துள்ளனர்.

குறிப்பாக தமிழ் மக்களின் நீண்டகால பாரம்பரியக் கட்சியாக இருக்கின்ற இந்த தமிழரசுக்கட்சியை எப்படியாவது உடைத்துவிட வேண்டும் என்று விசமத்தனமான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் கடந்த 75 வருட கால வரலாற்றில் சோரம் போகாத - ஊழலில் ஈடுபடாத - தமிழ் மக்களின் பாரம்பரியக் கட்சியாக இந்தக் கட்சியே திகழ்ந்து வருகின்றது.

இத்தகைய கட்சியை உடைக்கப் பலரும் பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்திருந்தாலும் இது பலனளிக்காத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் ஜனநாயகத் தமிழரசு என்றும், புதிய தமிழரசு என்றும் புதிய புதிய பெயர்களைச் சொல்லிக்கொள்கின்றனர். அவ்வாறாகத் தமிழரசை உடைப்பவர்களுக்கு தமிழரசு என்ற சொல்லும் தேவைப்படுவது ஆச்சரியமானது.

ஆக மொத்தத்தில் தமிழரசை உடைக்கும் முயற்சி ஒருபோதும் நிறைவேறாது. ஆனாலும், தெற்கத்தேயே சிங்கள நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் உடைக்கும் முயற்சியை தொடர்ந்தும் செய்தாலும் இது பலனளிக்காது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

மேலும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக நானும் பதில் பொதுச்செயலாளராக சுமந்திரனும் பதவிக்கு வருவதற்குப் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. யாப்பில் குளறுபடி செய்து இந்தப் பதவிகளுக்கு நாம் வரவில்லை.

எமது கட்சியின் யாப்புக்கமையத்தான் இப்போது அந்தப் பதவிகளை எடுத்திருக்கின்றோம்.

இவ்வாறான நிலைமைகள் இருக்கத்தக்கதாக மக்கள் மத்தியில் பிழையான தகவல்களைப் பரப்பி விசமத்தனமான பிரச்சாரங்களை சிலர் மேற்கொள்கின்றனர். அதுவும்



இப்போது தேர்தல் காலம் என்பதால் இன்னும் இன்னும் அதிகளவில் போலிப் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றனர்.

எனவே, தமிழரசைப் பிளவுபடுத்தும் நோக்கில் முன்வைக்கப்படும் பொய்ப் பிரச்சாரங்களை சரியான முறையில் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறாக தமிழரசை இலக்கு வைத்து அதை உடைக்க முயற்சிகள் எடுத்தாலும் அதையெல்லாம் தாண்டி நாம் முன்னேறுவோம்.

மாற்றான சிந்தனையில் பொறுப்பான அணுகுமுறையைப் பின்பற்றி அநேகமாக எல்லா இடங்களிலும் சபைகளைக் கைப்பற்றுவோம். ஆனாலும், ஆட்சியமைக்க தேவைப்படும் இடங்களில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் பேசுவோம்." - என்றார்.

## ஜே.ஆரின் பேரன் மீண்டும் கட்சி தாவல்

கொழும்பு, மார்ச் 13

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன, சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து, ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவியிருந்த நிலையிலேயே அவர் தற்போது மீண்டும் கட்சி தாவியுள்ளார்.

அவருடன் இணைந்து மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளும் சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில்



சர்வஜன அதிகாரம் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே இணைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## செப்புக் கம்பியைத் திருட முற்பட்டவர் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில்

திருகோணமலை, மார்ச் 13

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மின்பிறப்பாக்கியின் செப்புக்கம்பியைத் திருட முற்பட்ட நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் உள்ள மக்கெய்சர் விளையாட்டரங்கின் மூலையில் உள்ள மின் பிறப்பாக்கியில் புவித்தொடுப்பு வயரில் இருந்த செப்புக் கம்பியை வெட்டித் திருட முயற்சித்தபோதே இவருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது.

பின்னர் அந்த நபர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், அண்மைக்காலமாக பின் பிறப்பாக்கியில் உள்ள செப்புக்கம்பி வயர்கள் வெட்டப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா சிறைச்சாலை வைத்தியசாலையில்!

கொழும்பு, மார்ச் 13

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மஹர சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மேர்வின் சில்வாவுக்கு மேலதிக வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த புதன்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேங்காய் திருட முயன்றவர் துப்பாக்கிச்சூட்டில் படுகாயம்

*குருநாகல், மார்ச் 13*

*குருநாகல் - வீரம்புகெதர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உஹூமீய பகுதியில் வீடொன்றுக்கு அருகில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.*

*குருநாகல், வாரியபொல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே காயமடைந்துள்ளார்.*

*சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,*

*இந்த இளைஞர் உஹூமீய பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்பு ஒன்றுக்குள் சென்று தேங்காய் திருட முயன்றுள்ளார்.*

*இதன்போது தென்னந்தோப்பின் உரிமையாளர் இளைஞர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.*

*துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த இளைஞர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து சந்தேகநபரான தென்னந்தோப்பின் உரிமையாளர் 12 ரக போர் துப்பாக்கியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வாரியபொல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஆவார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரம்புகெதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*




# 17 ஆண்டுகளுக்குப் பின்பு இலங்கையில் நடைபெறவுள்ள தெற்காசிய கால்பந்து போட்டி!

17 ஆண்டுகளுக்குப் பின்பு தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு (SAFF) போட்டியை நடத்தும் உரிமை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் இடம்பெற்ற தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பின் நிர்வாகக் குழு கூட்டத்தில் குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடைசியாக 2008ஆம் ஆண்டு தெற்காசிய கால்பந்து போட்டி இலங்கையில் நடைபெற்றது. அதன்பின்பு 17 ஆண்டுகள் கழித்து மீண்டும் இலங்கையில் இந்த போட்டியை நடாத்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு முதல் கடந்த 30 ஆண்டுகளில் இலங்கை கால்பந்து அணியால் தெற்காசிய கால்பந்து சாம்பியன்களாக மாற முடியவில்லை.

இந்த ஆண்டு தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப்பில் இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான், பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்க உள்ளன.

# ‘புகுடு கண்ணாவின்’ சகோதரர் ஒருவர் கைது!

“புகுடு கண்ணா” என்றும் அழைக்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி பாலச்சந்திரன் புஷ்பராஜின் சகோதரர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இந்தியாவில் இருந்து போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இன்று (13) அதிகாலை நாட்டிற்கு வருகை தந்த போது விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 10, ஜம்பட்டா தெருவைச் சேர்ந்த 36 வயதான பாலச்சந்திரன் கஜேந்திரன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெண் வைத்தியர் துஷ்பிரயோம்: சந்தேகநபருக்குத் தடுப்புக்காவல்

கொழும்பு, மார்ச் 13

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமை செய்ததாக கைது செய்யப்பட்ட சந்தேகநபரான முன்னாள் இராணுவச் சிப்பாயைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் நீதிவான் முன்னிலையில் இன்று காலை அவர் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவரை விசாரணைக்காக 48 மணி நேரம் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி சந்தேகநபர் தலை மறைவாகியிருக்க உதவிய குற்றச்சாட்டில் கைதான அவரது சகோதரியும், மற்றொரு நபரும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# யாழ். தையிட்டி பகுதியில் போராட்டம்!




*யாழ் தையிட்டி பகுதியில் அமையப்பெற்றுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிராக பௌர்ணமி நாளான இன்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*போராட்டக்காரர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு*

*வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்,*

*எமது நிலம் எமக்கு வேண்டும்,*

*சட்டவிரோத விகாரையை உடனே அகற்று,*

*சட்டவிரோத விகாரைக்கு காவல்துறை பாதுகாப்பு, காவல்துறை அராஜகம் ஒழிக*

*போன்ற கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*இந்த போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், பொது மக்கள், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*போராட்டம் இடம்பெற்ற இடத்தில் ஏராளமான காவல்துறையினர் குவிக்கப்பட்டதுடன், அவர்கள் போராட்டக்காரர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.*

# கைவிடப்பட்டது அனுராதபுரம் போதனா வைத்தியசாலை போராட்டம்!

*அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியரை இனந்தெரியாத நபர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களால் தொடங்கப்பட்ட வேலைநிறுத்த போராட்டம் தொடர்ந்த நிலையில் தற்போது கைவிடப்பட்டுள்ளது.*

*சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் தங்கள் வேலைநிறுத்தத்தை கைவிடுவதற்கு தீர்மானித்ததாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.*




# உள்ளூராட்சி தேர்தலில் மன்னார் மாவட்டத்தின் நான்கு சபைகளில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சி மன்னார் மாவட்டத்தில் நான்கு சபைகளில் போட்டியிடுவதற்கு இன்று கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை ,நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியுள்ளது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த, இளைஞர் மற்றும் விளையாட்டு விவாகர அமைச்சின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரனின் பிரத்தியேக செயலாளருமான அப்துல் மொகமட் சாஜித்,

“கடந்த காலங்களிலே மக்கள் பல துன்பங்களுக்கு முகம் கொடுத்த நிலையிலேயே தேசிய மக்கள் சக்தியான எமது அரசாங்கத்தை தெரிவு செய்திருந்தார்கள்.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தை, சுற்றுலா, மீன்பிடி மற்றும் கைத்தொழில் ரீதியாக முன்னேற்றுவதற்கு எங்களுடைய அரசாங்கத்தின் சார்பிலும் ஜனாதிபதி சார்பிலும் பல்வேறு திட்டங்கள் உள்ளன. அவற்றை செயற்படுத்துவதற்கும் சரியான முறையில் நிர்வகிப்பதற்கும், எமக்கு உள்ளூராட்சி அதிகாரங்கள் அவசியம் தேவை.

ஆகவே மக்கள் இதை நன்கு உணர்ந்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சியை அமோக வெற்றி பெறச் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்” எனத் தெரிவித்திருந்தார்.

# பெண்மையும் கருப்பையும்

பெண் என்பவள் பலவீனமானவள் என்ற கருத்து பண்பாட்டின் வழியாகவும் வாழ்க்கை முறை வழியாகவும் பெண்களிடத்தில் காலம் காலமாகக் கடத்தப்பட்டு வருகின்றது. அக்கருத்தை உள்வாங்கிக்கொள்ளும் பெண்கள் தங்களைப் பலவீனமானவர்களாகக் கட்டமைத்துக்கொள்கின்றனர். அதன் வழி பெண்மை மென்மையின் வடிவமாக உருப்பெறுகின்றது.

கருவில் வளர்கின்ற சிசுக்கள் தாய்மார்களுடைய ஆழமான, தொடர்ச்சியான செய்கைகள் சிலவற்றை உள்வாங்கிக்கொண்டு அவற்றையே தங்களுக்குமான உணர்வுகளாக வடித்துக்கொள்கின்றனர்.

நமது சமூகத்தில் கர்ப்பிணிப் பெண்களைப் பெரும்பாலும் பாலின ரீதியில் ஒடுக்குவதும் தரக்குறைவாக நடத்துவதும் இயல்பான ஒன்றாக உள்ளது. ஒடுக்கப்படுகின்ற கர்ப்பிணிப் பெண்களின் கருவில் வளரும் சிசுக்களும் ஒருவித அடிமை உணர்வுகளைத் தங்களுக்குள் கட்டமைத்துக்கொள்கின்றன.

குழந்தைகள் தாயுடைய அரவணைப்பில் வளர்கின்ற வரை தாயுடைய உணர்வுகளை மட்டுமே பின்பற்றுகின்றன. குழந்தைகள் வளர்ந்து தன்னுடைய பாலினம் தந்தையது பாலின வகையைச் சேர்ந்தது என்ற உண்மையை அறிகின்ற பொழுது ஆண் குழந்தைகள் தாயிடம் பெற்ற அடிமை உணர்வுகளிலிருந்து விடுபட்டு, தந்தையுடைய ஆதிக்க உளவியலை உள்வாங்கிக்கொண்டு தங்களை ஆதிக்கவாதியாகவும் வலிமையுடையவர்களாகவும் கட்டமைத்துக் கொள்கின்றனர்.



'குடும்பத்தின் வாரிசாக வந்த மகராசன்' என்று ஆண் குழந்தையின் குறியைப் பிடித்துக் கும்பிடுவதில் தொடங்கி விளையாடுகையில் தவறி விழுந்து கண்கலங்குகையில் 'ஆம்பளைப் புள்ள நீ, பொம்புள புள்ள மாதிரி அழுகக் கூடாது' என்று ஆறுதல் கூறுவது வரை குடும்ப உறவுகளும் சமூகமும் ஆண் பாலினத்தைப் பலமானதாகவும் பெண் பாலினத்தைப் பலவீனமானதாகவும் கற்பிதம் செய்து, ஆண் குழந்தைகள் தொடக்கத்திலிருந்தே தங்களை வலிமை மிக்கவர்களாகக் கட்டமைத்துக்கொள்ள பாதை அமைத்துக் கொடுக்கின்றது.

மறுபுறம் கருவிலிருந்த பொழுது தாயிடமிருந்து பெற்ற ஒரு வித அடிமைத்தனத்தின் பாதிப்பை காலத்துக்கும் கொண்டிருக்கும்படியான சூழலைப் பெண் குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

குடும்ப வன்முறைகளினால் கர்ப்பிணி பெண்கள் அடைகின்ற மன அழுத்தங்கள் அனைத்தும் பெண் குழந்தைகளை நேரிடையாகப் பாதிக்கின்றன. பெண் குழந்தைகள் வளர்ந்து தானும் தாயுடைய பாலினத்தைச் சேர்ந்தவள் என்று அறிந்து கொள்ளும் தருணத்திலிருந்து எவ்வித சந்தேகமும் இன்றி தங்களை மென்மையானவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் கட்டமைத்துக்கொண்டு, தாயின் பிரதியாக வாழப் பழகிவிடுகின்றனர்.

ஆண் குழந்தைகளுக்கு வழங்குகின்ற கார், விமானம், ஜே.சி.பி போன்ற வாகன ரக விளையாட்டுப் பொருட்களை வழங்காமல் குடும்ப நிறுவனங்கள் பெரும்பாலும் பெண் குழந்தைகளுக்கு கிட்சன் செட்டுகளையும் டெடி, பார்பி பொம்மைகளையும் வழங்கி மென்மையான விளையாட்டு உலகத்தை அமைத்துத் தருகின்றன.

மேலும் மரமேறி விளையாட, நீண்ட தூரம் சைக்கிளிங் செய்ய, நண்பர்களுடன் நீச்சல் பழக ஆண் குழந்தைகளை அனுமதிப்பது போல் சாதரணமாகப் பெண் குழந்தைகளை குடும்பங்கள் அனுமதிப்பதில்லை.

ஒரு மனிதனுக்கு எந்த வயதிலும் அவன் விரும்பிய வண்ணம் தனக்குத் தகுந்தவாறும் தேவைக்கேற்பவும் உடலை வளைத்துக்கொள்ளத் தேவையான பலத்தைத் தருவதில் குழந்தைப் பருவ வளர்ப்பு முறை முக்கியப் பங்காற்றுகின்றது.

நாத்திகக் கொள்கையில் உள்ள ஒருவனுக்கு இரவு நேரத்தில் ஏற்படுகின்ற ஒரு சில ஒலிகள் பேய் பயத்தை உண்டாக்க முக்கியக் காரணமாக அவனது குழந்தைப் பருவத்தில் குடும்பத்தினர் 'புளிய மரத்தில் பேய் இருக்கு', 'பூச்சாண்டி வரான்' போன்று பயம்காட்டி கட்டுப்படுத்தி வளர்த்த முறை அமையும். அதுபோல குழந்தைப் பருவம் தொடங்கி அடக்கி வளர்க்கப்படுவதால் பெண்கள் கல்வி கற்று, பொருளாதார விடுதலையடைந்து உயரிய பதவிகளை வகிக்கின்ற பொழுதும்கூடத் தங்களை வலிமையானவர்கள் என்று முழுமையாக நம்பத் தயங்குகின்றனர். பெண்ணாகப் பிறந்துவிட்டதாலேயே பலர் தங்களை பலவீனமானவர்களென்று நம்பிவிடுகின்றனர்.

பெண் குழந்தைகள் வளரிளம் பருவத்தை எட்டியதும் குடும்பத்தினரால் ஓடியாடி விளையாடக்கூடத் தடை விதிக்கப்படுகின்றது. சிட்டாகப் பறக்கும் சிறுமிகளின் சிறகை ஒடித்துவிடுகின்றனர்.

புதிதாக வளர்ந்துவரும் மார்பகப் பகுதிகள் துருத்திக்கொண்டு வெளியில் தெரிந்துவிடுமோ? நடக்கையில் பின்பகுதியை யாராவது கேவலமாகப் பார்த்துவிடுவார்களோ போன்ற உடல் மீதான தாழ்வு மனப்பான்மைக்குள்ளாகும் வகையில் சமூகம் தொடர்ந்து சிறுமிகளை அச்சுறுத்தி வருகின்றது.

பதின் பருவத்தில் முதல் தடவை ஏற்படுகின்ற மாதவிடாய் வயிற்று வலிகளுக்கு, 'பெண்ணாக பிறந்து விட்டால் மாதத்தில் 3 நாள் வலி அனுபவிச்சு தான் ஆகணும்' என்று வருகின்ற எதிர்மறையான ஆறுதல் மொழிகள் பெண்களை, 'ஏன்தான் போயும்போயும் பெண்ணா பிறந்தோமோ' என்று தன்னுடைய பாலினத்தின் மீது அதிருப்திகொள்ளச் செய்கின்றது.

தொடர்ந்து மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஏற்படுகின்ற கடுமையான உடற் சோர்வு, இடுப்பு மற்றும் வயிற்று வலி, வாந்தி மயக்கம் போன்றவற்றிற்கு ஊட்டச் சத்து பற்றாக்குறையும் மாதவிடாய் மீதான தவறான கற்பிதங்களுமே காரணமாகின்றன.

பள்ளி, கல்லூரியில் படிக்கின்ற பெண்களும்கூட வழக்கமாகத் தங்களுக்கு ஏற்படுகின்ற மாதவிடாய் உதிரத்தைக் கண்டதும் அருவருப்பாக உணர்ந்து மயங்கி விழக்கூடிய நிலை இன்றும் நீடிக்கின்றது.

மாதவிடாய் எந்தத் திகதியில் வரும், இரண்டு நாள் முன்கூட்டியே வந்துவிட்டால் என்ன செய்வது? வழிபாட்டு நாளில் வந்துவிட்டால் எப்படி எல்லாம் அவஸ்தைப் பட வேண்டி வரும்? இன்றைக்கு மாதவிடாய் ஆக வேண்டிய நாள், வெள்ளை நிற உடையை மறந்து அணிந்து வந்துவிட்டோமே? நேப்கின்களை இன்று எடுத்து வர மறந்து விட்டோமே? போன்ற பயம் நிறைந்த சிந்தனைகள் அதிகமாகப் பெண்களை ஆக்கிரமித்துக்கொள்கின்றன.

அறியாமல் ஆடைகளில் மாதவிடாய் உதிரம் கசிந்து படிவது என்பது பெண்களை வெகுவாகப் பதற்றமடையச் செய்யக்கூடிய வகையில் மாதவிடாய் உதிரம் மிகவும் அருவருப்பானதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. கணித்து வைக்காத தருணங்களில் முன்கூட்டியே மாதவிடாய் வெளியேறுவதைப் பெண்கள் வெகுவாக வெறுக்கின்றனர். அறிவுக்கு எட்டாமல் நிகழ்வதை எண்ணிப் பல பெண்கள் அவதியுறுகின்றனர்.

அவதியுருகின்றனர் என்பதைத் தாண்டி வழக்கமாக ஏற்படுகின்ற மாதவிடாயைக்கூடக் கணிக்க முடியாதபடி உடலிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்று குறிப்படுவது பொருத்தமாக இருக்கும். 8 மணி நேர அலுவலகப் பணி முடித்த பின் இரவு உறங்கும் வரை வீட்டுப் பணிகளில் ஈடுபடும்படியான நிர்பந்தத்தில் இருக்கின்ற பெண்களை, தங்களைப் பற்றியும் தங்களது உடலைப் பற்றியும் கவனித்துக்கொள்ள விடாமல் குடும்ப நிறுவனம் அன்பு, கருணை, தியாகம் என்ற பெயரில் துன்புறுத்தி வருகின்றது.

பெண்கள் தங்களது உடலோடு பேச வேண்டும். உடலுக்கு என்ன தேவை இருக்கிறது? எதைக் கேட்கிறது? எதைத் தருகிறோம்? சரியாகத்தான் தருகிறமோ? ஏதேனும் குறைபாடு இருக்கிறதா என்பதையெல்லாம் பெண்கள் உடலோடு உரையாடித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நேரம் கிடைக்கிற பொழுது உரையாடலாம் என்று எண்ணி கண்டுகொள்ளாமல் விடுவதைத் தவிர்த்து திட்டமிட்டு தினமும் உரையாடலை நிகழ்த்திக்கொள்ள வேண்டும்.

உடலோடு பேசுவதற்கான மொழியாக தினசரி உடற்பயிற்சிகள் இருக்கின்றன. அம்மியில் அரைப்பதும் துவைத்துப்பெருக்கி கோலமிடுவதுமே பெண்களுக்குப் போதுமான உடற்பயிற்சியாக இருக்கும் என்று, நடைபயிற்சியோடு கூடிய சில விளையாட்டுகளுடன் ஜிம்முக்கு தினசரி சென்று வரும் ஆண்கள் கூறும் அரைவேக்காட்டு ஐடியாக்களுக்கு ஒரு போதும் செவிசாய்த்துவிடாதீர்கள் பெண்களே!

அம்மியில் அரைக்கையில் மூளை சுவையைப் பற்றி மட்டுமே சிந்திக்கும், அதேபோல் துவைக்கும் பொழுதும் பெருக்கிக் கோலமிடும் பொழுதும் செய்யும் பணியைப் பற்றியே மூளையின் சிந்தனை செயற்படும். உங்கள் உடலோடு பேசிக்கொள்ள மூளை உடலைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். உடலின் மீதான கவனக் குவிப்பை உடற்பயிற்சிகள் முழுமையாக ஏற்படுத்தித் தருகின்றன. அது மட்டுமின்றி உடலைப் பின்புறமாக வளைப்பது போன்ற உடற்பயிற்சிகளை அன்றாட வீட்டுப் பணிகளில் பயன்படுத்திக்கொள்ள முடியாது.

தினசரி நேரமொதுக்கி உடற்பயிற்சிகளைச் செய்கையில் உடலானது நம் வசத்திற்கு வளைந்து கொடுக்கக்கூடிய நிலைக்கு வரும். அமைதிக்கான பயிற்சிகளைப் பின்பற்றுகையில் பெண்களின் உடலும் உளவியலும் நலம் பெறும்.

உடல் குறித்தான தினசரி தேவை, மாற்றங்கள் குறித்து அறிந்துகொள்ள பெண்கள் உடற்பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். தொழிலாளர் சட்டங்கள் வலியுறுத்துகின்ற நேர மேலாண்மையைப் பெண்கள் சமரசமின்றி கடைபிடிக்க வேண்டும்.

இவையெல்லாம் பெண்களின் கடமையென்று கருதி வீட்டுப் பராமரிப்புப் பணிகள் அனைத்தையும் இழுத்துப்போட்டு செய்யாமல் ஆண் உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, வீட்டுப் பணிச்சுமையைக் குறைத்துக்கொண்டு உடற்பயிற்சி செய்வதும், கலை இலக்கியத்தில் நேரம் செலவிடுவதும், விரும்பிய பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தனிமனிதனின் அடிப்படை உரிமை என்பதைப் பெண்கள் உணர்ந்து தங்களது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தினசரி உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடலில் ஏற்படக்கூடிய மாதவிடாய் போன்ற கருப்பை சார்ந்த நிகழ்வுகளைப் பெண்களால் எளிதில் உணரவும் கணிக்கவும் முடியும்.

பெண்மை என்ற பாலினம் பலவீனமானதல்ல. பலவீனமானதாக ஆக்கப்பட்டுள்ளது. கருப்பை என்பது பெண்ணுடலில் இருக்கக்கூடிய தனித்துவமான உறுப்பு. கருப்பை மீதான அதிகாரம் அதை வைத்திருக்கக்கூடிய பெண்ணுக்கு மட்டுமே உரியது. இயற்கைக்கு மாறாக கருப்பை மீது கணவனும் பெற்றோரும் குடும்பமும் சாதியும் சமயமும் அரசும் ஆதிக்கம் செலுத்துகின்ற பொழுதே பெண் பலவீனமானவளாக ஒடுக்கப்படுகிறாள் என்பதைப் பெண்கள் உணர்ந்து சுயத்தை மீட்டெடுத்துக்கொள்ள வேண்டும்.

பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் முழுவதுமாக மறுக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், குடும்ப அடிமைகளாகப் பெண்களைக் குழந்தை பெற்று வளர்க்க மட்டுமே பயன்படுத்தி வந்த காலகட்டத்தில், முறையான கருத்தடை உபகரணங்கள் தோன்றி பரவலாக மக்கள் பயன்பாட்டிற்கு வராத காலகட்டத்தில் பெண்ணியத்தைத் தீவிரமான சிந்தனைக்கு உட்படுத்திய பெண்ணியவாதிகள் கருப்பையை அகற்றித்தான் பெண் விடுதலையை சாத்தியப்படுத்த முடியும் என்று கருதியதை அந்தக் காலகட்டத்தின் நியதியாகக் கொண்டு புறக்கணிக்காது போற்ற வேண்டும்.

அதேநேரம் ஏராளமான கருத்தடை சாதனங்களும் பாலுறவு உபகரணங்களும் தோன்றிவிட்ட, ஓரளவிற்கு சமத்துவப் பாதையைப் பற்றிக்கொண்டு பெண்கள் போராடி நகரும் நம் காலத்தோடு கருப்பையை அகற்றி அதிகாரத்தை அடைவது என்ற அன்றைய கால நியதியைப் பொருத்திப் பார்ப்பதும் முறையாக இருக்காது.

கருப்பையை அகற்றாமல் அதன் மீதான அதிகாரத்தைக் கணவனுக்கும் காதலனுக்கும், பேரப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம்பிடிக்கும் குடும்பத்திற்கும் விட்டுக்கொடுக்காமல் சுயத்தோடு பெண்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்வது இன்றைய காலத்தின் தேவையாகவும் கனவாகவும் இருக்க வேண்டும்.

கருப்பை ஆற்றல் மிக்கதும் தனித்துவமானதும்கூட் பெண்களுக்குக் காம இன்பத்தைக் கடலளவு தரக்கூடியது கருப்பை. எனவே கருப்பையையும் அதன் செயல்களையும் அறிந்து பெண்கள் கொண்டாட வேண்டும். தீட்டு, புனிதக் கற்பிதங்களிலிருந்து கருப்பையை விடுவித்து பெண்களுக்கான மகிழ்ச்சியின் ஊற்றாக வைத்துக் கொண்டாடப்பட வேண்டும்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13-.03.2025 இல் வெளியிடப்பெற்றது.